# யாழ்ப்பாணத்தில் மீனவர்களின் போராட்டத்தால் பரபரப்பு! இந்தியத் துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்றனர்

## கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது





இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்கம் உள்ளிட்ட மீனவ அமைப்புக்கள் இணைந்து யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 22 செவ்வாய்க்கிழமை 05.03.2024 கதிர் 195

# காணி விடுவிப்பு தொடர்பில் ஆளுநரால் பாதுகாப்புச் செயலாளரிடம் கோரிக்கை



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை, மீள்குடியேற்றம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு விடுவிப்பது தொடர்பில் ஆளுநரால் பாதுகாப்புச் செயலாளரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தாம் பரிந்துரைகளை அனுப்புவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரிடம் இதன்போது உறுதியளித்தார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்த வேண்டும்!

## நாடு திரும்பிய பஸில் வலியுறுத்து



ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்த வேண்டியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன 2 ➤

# 40 எம்.பிக்களுடன் எதிரணியில் அமர்வாரா நாமல் ராஜபக்ச எம்.பி.?



40 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தான் எதிரணியில் அமரத் திட்டமிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மை இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தலைமையிலான மொட்டுக் கட்சி குழுவொன்று எதிரணிக்குச் செல்லவுள்ளது எனவும், அதன்பின்னர் எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கு வியூகம் வகுக்கப்படும் எனவும் 2 ➤

# மைத்திரி போட்டியிட்ட சின்னத்தில் ரணிலும் களமிறங்குவதற்கு முடிவு

## சிங்கள ஊடகம் தகவல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க அன்னம் சின்னத்திலேயே களமிறங்குவார் என அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காகப் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்பட்டு வருகின்றது எனவும், நிமல் லான்சா தரப்பு, மொட்டுக் கட்சியின் சுயாதீன தரப்பு உட்படப் பலரும் ரணிலை ஆதரிக்கவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

மே தினக் கூட்டத்தைப் பிரமாண்டமாக நடத்தி மெகா கூட்டணியை மக்கள் முன்னனிலையில் அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டணியில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# ஒரு வாரத்திற்குள் நியாயம் கிடைக்காவிட்டால் மீண்டும் சுகாதாரத் தொழிற்சங்கப் போராட்டம்!

## சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை

*சுகாதார அமைச்சர் மற்றும் ஏனைய அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் சுகாதார ஊழியர்களுக்கான பொருளாதார நீதி தொடர்பான தொழில்நுட்ப குழு அறிக்கையின் பிரகாரம், இன்னும் ஒரு வாரத்திற்குள் தீர்வு வழங்கப்படாவிட்டால், நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*72 சுகாதார சங்கங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பின் தலைவர்கள் ஒன்று கூடி இந்த முடிவை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த கட்ட தொழிற்சங்க நடவடிக்கையின் போது நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு சுகாதார அமைச்சும், அமைச்சரும், அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும் என கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-12)*

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை கையளிப்பு



சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையே இன்று இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பாடங்களைக் குறைக்க நடவடிக்கை



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக தற்போதுள்ள பாடங்களின் எண்ணிக்கை ஏழாக குறைக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மீதமுள்ள மூன்று பாடங்களை உள்நாட்டில் மாணவர்களுக்கு வழங்கக்கூடிய தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் அறிவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர்களின் விருப்பத்திற்கேற்ப திறமைகளை வெளிப்படுத்தும் பாடப் பிரிவுகளில் தொழில்சார் பயிற்சிகளைப் பெறுவதற்குத் தேவையான பின்னணி தயாரிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# தரம் 8 முதல் பாடசாலைகளில் ஏ. ஐ. தொழில்நுட்பப் பாடம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

தரம் 8 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்பப் பாடத்துடன் செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) கற்பதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 20 பாடசாலைகளில் இந்தக் கற்கை தொடங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# நாவற்குழியில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணத்தில் கட்டடம் அமைப்பதற்கு இன்று கிடங்கு வெட்டியபோது கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ். நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய நிலத்தைத் தோண்டியபோது நிலத்தின் கீழ் கைக்குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது.

மேலும், குண்டுகள் ஏதும் இருக்கலாம் என்ற அச்சம் காரணமாக நிலத்தைத் தோண்டும் பணிகளும் இடைநிறுத்தப்பட்டன. (அ)

## ஜனாதிபதித்.....

பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றிருந்த பஸில் ராஜபக்ச இன்று காலை நாடு திரும்பிய வேளையில் இதனைக் கூறினார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்தால் தான் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வர எண்ணம் இல்லை என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்தால் தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிலுள்ள தனது பிள்ளைகளுடன் விடுமுறையைச் செலவிட்ட அவர், சுமார் இரண்டு மாதங்கள் அங்கு தங்கியிருந்த நிலையில் இன்று நாடு திரும்பினார்.

எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான 650 இலக்க விமானத்தில் அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

தாம் வழக்கமாக, பிள்ளைகளுடன் தங்குவதற்காக டிசம்பர் மாதம் அமெரிக்கா செல்வதாகவும், ஓரிரு மாதங்கள் அவர்களுடன் அங்கு தங்கியிருந்த பின்னர் தற்போது நாடு திரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர் வரவுள்ளது நாடாளுமன்றத் தேர்தல்தான் எனவும், அந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகளை ஸ்திரப்படுத்துவதற்காகவே பஸில் ராஜபக்ச நாட்டுக்கு வரவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்திருந்தமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பஸில் ராஜபக்ச, எந்தவொரு தேர்தல் வந்தாலும் தாம் அதற்கான ஒழுங்குகளைச் செய்வேன் என்றும், ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்த வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

யார் ஜனாதிபதியாக வந்தாலும் அது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடன்தான் வருவார் என்றும் அவர் கூறினார்.

'மொட்டுக் கட்சி பலமாக உள்ளதா?' - என்ற கேள்விக்கு, "ஆம் அதனால்தானே நாம் கடந்த 3 தேர்தல்களையும் வென்றிருந்தோம்." - என்று அவர் பதிலளித்தார்.

'தற்போது மொட்டுக் கட்சி பல கூறுகளாகப் பிரிந்துள்ளதே?' - என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது, "அரசியல் என்றால் பிரிவதும் பின்னர் சேர்வதும் சகஜம்தான்" - என்று குறிப்பிட்டார்.

'நீங்கள் மீண்டும் மக்களை ஏமாற்ற முயற்சி செய்கிறீர்களா?' - என்ற கேள்விக்கு, "இல்லை. நாம் ஒருபோதும் மக்களை ஏமாற்ற முயற்சிக்கவில்லை. மக்கள் சொல்வதைத்தான் நாம் மேற்கொள்கின்றோம். ஒரு சில வேளைகளில் எமது முடிவுகள் பிழைத்துப் போயுள்ளன. மக்கள் நாம் சொல்வதை ஏற்பதில்லை. சில வேளைகளில் மக்கள் சொல்வதை நாம் கேட்பதில்லை போன்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன." - என்று அவர் பதிலளித்தார்.

'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிர்வரும் தேர்தல் சவாலானது என நீங்கள் ஏற்கின்றீர்களா?" - என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது, "ஆம். எப்போதும் அனைத்து தேர்தல்களும் சவாலானதுதான்." - என்று தெரிவித்தார்.

'ஜனாதிபதித் தேர்தலில், மொட்டுக் கட்சி வேட்பாளரை நிறுத்துமா? வேட்பாளர் ஒருவருக்குத் தனது ஆதரவை மொட்டுக் கட்சி வழங்குமா?' - என்ற கேள்விக்கு, "அது தொடர்பில் நாம் இன்னும் முடிவு எடுக்கவில்லை. எமது அரசியல் சபை கூடி, எமது தலைவரினதும், தொண்டர்களினதும் ஆலோசனைகளைப் பெற்று எதிர்வரும் சில நாட்களில் நாம் முடிவெடுப்போம். கலக்கமடைய வேண்டியதில்லை." - என்று அவர் பதிலளித்தார்.

'எதிர்வரும் தேர்தலில் ராஜபக்ச ஒருவரா போட்டியிடுவார்?' - என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது, "அதுவும் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அது அவ்வாறு அமையும் என்று நாம் நம்பவில்லை." - என்று கூறினார். (அ)

## யாழ்ப்பாணத்தில்......

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்றனர். இதன்போது இந்தியத் துணைத் தூதரகத்துக்குச் செல்லும் வழியில் பொலிஸார் இடைமறித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தூதரகம் முன்பாகப் பேரணியைச் செல்லவிடாது வரியல் போட்டு பொலிஸார் இடைமறித்ததுடன் மீனவ அமைப்புக்களின் எட்டு பிரதிநிதிகளை சந்திப்பதற்கு அனுமதி வழங்கினர்.

இதற்கமைய தூதரகத்துக்குள் சென்ற பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

இந்தநிலையில், பொலிஸாரால் இடைமறிக்கப்பட்ட போராட்டக்காரர்கள், "இலங்கை மீனவர்களின் கடல் வளத்தை அழிக்காதே", "தமிழக மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்து", "எமது கடல் வளப் பாதுகாப்பை உறுதி செய்" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு இலங்கை - இந்திய அரசுகளுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

மேலும் அவர்கள், "இந்த நாட்டில் வாழுகின்ற நாங்கள், எங்களது பாதுகாப்பையும் உரிமையையும் வலியுறுத்தி தரையில் போராட்டத்தை நடத்துகின்றபோது கம்பிக்கூடுகளை வைத்து எங்களைத் தடுத்து நிறுத்துகின்ற இலங்கைப் படைகள், கடலில் எங்கள் பகுதியில் அத்துமீறி எங்களையே தாக்குகின்ற இந்திய மீனவர்களை ஏன் தடுத்து நிறுத்த முடியாதுள்ளது?" என்று கேள்வி எழுப்பிய மீனவர்கள், "எங்களைக் கட்டுப்படுத்த முன்னர் இந்தியர்களைக் கட்டுப்படுத்துங்கள்" என்றும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 40 எம்.பிக்களுடன்.......

தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையிலேயே இந்த அரசின் இருப்பு தங்கியுள்ளது எனவும், எனவே, மக்கள் ஆணைக்கு புறம்பாக செயற்பட தயாரில்லை எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார் .

அதேவேளை, அடுத்த எந்த தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரி 54 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியின் வருகின்ற 50 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியின் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள், மற்றும் அனைத்து கற்கை நெறி மாணவர்களை கொண்டு 14 குழுக்களை ஒன்றினைந்து நடைபெறும் மூன்று நாள் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமானது.

கல்லூரியின் அதிபர் எஸ். தியாகராஜாவின் அனுமதியுடன் விரிவுரையாளர் எம்.ரமணிதரனின் வழிகாட்டலில் மாணவர்கள் ஏற்பாட்டு குழுவினை ஒன்றினைத்து இடம்பெறுகிறது.

ஆரம்ப நிகழ்வில் சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியின் அதிபர், விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள், கல்லூரியின் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியின் விரிவுரையாளர் எம். ரமணிதரன் வரவேற்பு உரை நிகழ்த்தினார்.

தொழிநுட்ப கல்லூரி மற்றும் பயிற்சி திணைக்களம் வெறுமனே தொழில் கல்வி மாத்திரம் வழங்க வேண்டும் என்பதற்கு மேலதிகமாக உடல், உள, ஆரோக்கியம் என்பவற்றை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு எங்களிடம் இருக்கிறது அந்த வகையில் இந்த சுற்றுப்போட்டியை ஒழுங்கு படுத்தி இருக்கிறோம்.

இந்த சுற்றுப்போட்டியின் நோக்கம் எங்களுடைய கல்லூரியின் ஆண்டு நிறைவை கொண்டாடுவது மட்டும் அல்ல மாணவர்களுக்கு இடையிலான ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வு, சகிப்புத் தன்மைகள் என்பதை



உண்டு பண்ணுவதற்கான போட்டியாக இந்த போட்டி அமைந்துள்ளது, என்றார்.

சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியின் அதிபர் எஸ். தியாகராஜா தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இந்த நிகழ்விற்கு சுயமாகவே வெற்றிக் கிண்ணங்களை ஒன்றுதிரட்டி இதற்கு முன்னின்று உழைத்த விரைவுரையாளர் எம். ரமணீதரன் அவர்களுக்கும், திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் மூலம் மாணவர்களுக்கு இடையிலான ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வை வைத்துக் கொள்ளும் ஓர் தளமாக இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி காணப்படுகிறது.

அதன் அடிப்படையில் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் கொண்ட இந்த போட்டியில் வெற்றி பெறுகின்ற அணியினையும் மற்றைய வீரர்களையும் இணைத்து இன்னும் இதனை விரிவு படுத்தும் வகையில் பல்கலைக்கழகம், பாடசாலைகள், காவல்துறையினரையும் இணைத்து பெரிய அளவிலான ஒரு கிரிக்கெட் சுற்றுப் போட்டியை கல்லூரியின் மைதானத்திலேயே நடத்த தீர்மானித்துள்ளோம் .

இதன் ஊடாக கல்லூரியின் சிறப்புக்களையும், அதன் உடைய பண்புகளையும் சமூக மயமாக்குகிற ஓர் செயற்பாடாக இந்த விளையாட்டை வைத்துக்கொண்டு இதில் அனைத்து மாணவர்களும் சிநேகபூர்வமான மற்றும் புரிந்துணர்வுடன் சிறப்பாக செயற்படுவீர்கள், என தெரிவித்தார்.

# வடக்கில் சுகாதாரத்துறையினரின் சவால்கள் குறித்து அமைச்சருக்கு எடுத்துரைத்த ஆளுநர்

சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரனவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்கொழும்பு – சுவசெரிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் இன்று சந்தித்துக்கலந்துரையாடினார்.

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறைக்கான ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதால் சுகாதாரத் துறையினர் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரால், சுகாதார அமைச்சருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

வடக்கில் இதுவரை நிரப்பப்படாத ஆளணி மற்றும் ஆளணி வெற்றிடங்களுக்கான மாற்றீடுகள் தொடர்பில் எதிர்வரும் சில மாதங்களுக்குள் தீர்வு பெற்றுத்தரப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம், சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்தார்.



சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி. மஹிபாலவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார். (அ)

# அழுகிய நிலையில் முதியவரின் சடலம்

## வவுனியாவில் பரபரப்பு

வவுனியா, ஓமந்தை, நாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள நீர் நிலையில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைவிடப்பட்ட கற்குவாரியாகக் காணப்பட்ட அந்தப் பகுதியில் சடலம் ஒன்று கிடக்கின்றமை தொடர்பாக அந்தப் பகுதிக்குச் சென்றவர்களால் ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் அழுகிய நிலையில் உள்ளமையால் மேற்படி வயோதிபர் சில தினங்களுக்கு முன்னராகவே இறந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஓமந்தைப் பொலிஸார், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# தென்னைப் பயிரைத் தாக்கும் வெள்ளை ஈ கட்டுப்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்வு



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளைஈ சம்பந்தமான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இலங்கையில் தென்னைப் பயிர்ச்செய்கை நோய் ஏற்படுத்தும் வெள்ளை ஈ பூச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் இன்று கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் வடமாகாண தென்னைப் பயிர்ச்செய்கையின் பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தனால் இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

குறித்த விழிப்புணர்வுக் கலந்துரையாடலில் தென்னைப் பயிர்செய்கையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். கலந்துரையாடலின்பின்பாதிப்புக்குள்ளான தென்னை மரங்களுக்கு உத்தியோகத்தர்களால் மருந்து தெளிக்கும் வழிமுறைகள் செய்முறையாகக் காண்பிக்கப்பட்டன(02)


# பாகிஸ்தானில் புதிய பிரதமர் பதவியேற்பு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து!

பாகிஸ்தான் பிரதமராக இரண்டாவது முறையாக தவியேற்றுள்ள ஷாபாஸ் ஷெரீஃப்புக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சிக்கு 108 இடங்கள் கிடைத்தன. தடைசெய்யப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 93 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஸர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 68 இடங்களுடன் 3 ஆவது இடத்தைப் பிடித்தது.

இந்தச் சூழலில், ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இம்ரான்கான் எந்தக் கட்சியுடனும் கூட்டணி ஏற்படுத்தி ஆட்சியமைக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதையடுத்து, பிபிபி மற்றும் பிற கட்சிகளின் ஆதரவுடன் பிஎம்எல் என் கட்சி ஆட்சியமைக்கிறது.

அந்தக் கூட்டணியின் பிதரமர் தேர்வாளராக ஷாபாஸ் ஷெரீஃப் அறிவிக்கப்பட்டார். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் ஷாபாஸ் ஷெரீஃப் வெற்றி பெற்றார். இஸ்லாபாதிலுள்ள அதிபர் மாளிகையில் திங்கள்கிழமை நேற்று நடைபெற்ற நிகழ்வில் பாகிஸ்தான் நாட்டின்24 ஆவது பிரதமராக அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.



இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமராக 2 வது முறையாக பதவியேற்றுள்ள ஷாபாஸ் ஷெரீஃப்புக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, "பாகிஸ்தானின் பிரதமராக பதவியேற்ற ஷாபாஸ் ஷெரீப்ஃபுக்கு வாழ்த்துகள்" என்று தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (04)

# பங்களாதேஷ் அணியுடனான முதல் ரி-20 இலங்கை அணிக்கு 3 ஓட்டங்களால் வெற்றி!



இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில், நேற்று நடைபெற்ற பரபரப்பான முதலாவது ரி-20 போட்டியில் 3 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்து, முதலில் துடுப்பெடுத்தாடுமாறு இலங்கை அணிக்கு அழைப்பு விடுத்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் சதீர சமரவிக்கிரம அதிகபட்சமாக 61 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 59, பதில் அணித்தலைவர் சரித் அசலங்க ஆட்டமிழக்காது 21 பந்துகளில் 6 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம், தஸ்கின் அஹமட், ரிஷாட் ஹொசைன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பங்களாதேஷ் அணி சார்பில் மஹ்முதுல்லா 54 ஓட்டங்களை எடுத்தார். இலங்கை அணிக்கு இறுதிக் கட்டம்வரை தலைவலியைக்கொடுத்து - அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஜாகெர் அலி 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இலங்கையின் பந்து வீச்சில் அஞ்சலோ மத்யூஸ், பினுர பெர்னான்டோ, தசுன் சானக ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக சரித் அசலங்க தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது. (04)





# நேபாளத்தில் ஆளும் கூட்டணியில் பிளவு! அமைச்சரவையிலும் மாற்றம் ஏற்பட்டது

நேபாளத்தில் அந்த நாட்டு காங்கிரஸ் கட்சியுடன் இருந்த கூட்டணியை திடீரென நேற்று முறித்துக்கொண்ட பிரதமர் புஷ்பகமல் தாஹால் பிரசண்டா, முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலியுடன் புதிய கூட்டணியை அமைத்துள்ளார்.

நேபாளத்தில் ஷேர் பகதூர் தேவுபா தலைமையிலான நேபாள காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து சிபிஎன் (மாவோயிஸ்ட் மையம்) கட்சித் தலைவர் புஷ்பகமல் தாஹால் கடந்த 15 மாதங்களுக்கு முன்னர் ஆட்சியமைத்தார். எனினும், பல்வேறு விவகாரங்களில் இரு கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவிவந்ததால் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில், நேபாள காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணியை முறித்துக்கொள்வதாக திங்கள்கிழமை அறிவித்த பிரதமர் பிரசண்டா, முன்னாள் பிரதமர் கே.பி. ஒலியின் சிபிஎன்-யுஎம்எல் கட்சியுடன் புதிய கூட்டணியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

அதன் தொடர்ச்சியாக, அந்தக் கட்சியினர் சிலருக்கு அமைச்சரவை பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பழைய அமைச்சரவையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (04)

# கருக்கலைப்புக்கு அரசமைப்புச் சட்ட உரிமை பிரான்ஸில் நாடாளுமன்றம் ஒப்புதல் அளிப்பு

பிரான்ஸில் கருக்கலைப்பை அரசமைப்புச் சட்ட உரிமையாக்கும் வரலாற்று சிறப்பு மிக்க முடிவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

பெண்கள் கருவைக் கலைப்பதற்கு சட்ட உத்தரவாதம் அளிக்கும் வகையில் பிரான்ஸ் அரசமைப்பின் பிரிவு 38 இல் திருத்தம் கொண்டு வரும் மசோதா நாடாளுமன்றத்தின் தேசியப் பேரவை, செனட் அவைகளில் தாக்கல் செய்யப்பட்டது. "

இந்நிலையில், நேற்று திங்கள்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டு அமர்வில் 780 உறுப்பினர்கள் ஆதரவுடன் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.




இந்த மசோதாவை எதிர்த்து 72 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

மசோதா நிறைவேற்றதைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் பெண் உரிமைச் செயல்பாட்டாளர்கள் கொண்டாடத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவில் கருக்கலைப்புக்கு வழங்கப்பட்டு வந்த அரசமைப்பு சட்ட உரிமையை அந்நாட்டு நீதிமன்றம் கடந்த 2022 இல் ரத்துச் செய்தது. இதைத்தொடர்ந்து, பிரான்ஸில் கருக்கலைப்புக்கு அரசமைப்புச் சட்டத்தின்கீழ் பாதுகாப்பு அளிக்கப்படும் என அதிபர் இமானுவல் மக்ரோன் உறுதியளித்திருந்தார். (04)

# தந்தையை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கல்




(வி.ரி. சகாதேவராஜா)மாளிகைக்காடு கிராமத்தில் தந்தையை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் வழங்கி வைத்தார்.

சமூக அபிவிருத்தி சபையின் 8 வது வருடாந்த நிறைவு விழா அதன் ஸ்தாபக தலைவரும் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் உதவித் தவிசாளருமான ஏ.எம்.ஜாஹீர் ஜே.பி. தலைமையில் இடம்பெற்றது .

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பும், சிறப்பு அதிதிகளாக தொழில் அதிபர்களான எம்.எம்.ஆசாத் றஹீம், ஏ.ஏ. அஷ்ரப் அலி ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்வில் தந்தையை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு அமைப்பில் திறமையாக செயற்பட்டவர்களுக்கு கௌரவிப்பும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# திருக்கோணேஸ்வர ஆலய சிவராத்திரி நிகழ்வு ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் பங்கேற்பு!



(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற 3ஆம் நாள் சிவராத்திரி நிகழ்வில் தமிழ்நாடு - மைலம் பொம்புரம் ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதிமுதல் சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் தினமும் மாலை வேளையில் இடம்பெற்று வருகின்றன. பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் 8 ஆம் திகதி சிவராத்திரி தினம் வரை இந்நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# நாடகப் பயிலகம் புதிய பிரிவு ஆரம்பம்

நாடகக் கலையின் மேம்பாடு கருதி செயல்முறை சார்ந்த தேர்ச்சியினை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தின் தரம்11,12,13 களில் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்துகொள்ள முடியும்.

ஆறுமாதங்களைக் கொண்ட இப்பயிற்சிநெறிக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் பி.ப.3.30 மணிதொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத் துணைக்கலைகள் ( வேடஉடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி விதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும்.

இப்பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தருவதன் மூலம் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மர்/ஹும் ஏ.ஆர்.எம்.ஜிப்ரியின் நான்காவது நினைவு தினமும் நூல் அறிமுக நிகழ்வும்



இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சிரேஷ்ட ஒலி-ஒளிபரப்பாளர் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், 'ஏ.ஆர்.எம்.ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (3) மாளிகைக்காடு, பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி - ஒளிபரப்பாளர் யூ.எல். யாகூப் தலைமையில், சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஷஹிலா இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் எஸ்.கலையரசன் உட்பட முன்னாள் உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள், மர்ஹூம் ஜிப்ரியின் குடும்பத்தினர், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்துக் கூட்டுத்தாபனங்களும் நிறுவனங்களாக மாற்றப்படும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து கூட்டுத்தாபனங்களும் நிறுவனங்களாக மாற்றப்பட்டு, அந்த நிறுவனங்களின் அனைத்து பங்குகளும் ஒரு பிரதான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'வட்ஸ் நியூ' எனும் இளம் சட்ட வல்லுநர்களுடனான சட்ட மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டில் காலாவதியான சட்டங்களுக்கு பதிலாக சகல துறைகளையும் உள்ளடக்கியவாறு புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய கால நேரம் வந்துவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

புதிய பொருளாதார மாற்றத்தை நோக்காகக் கொண்டு கடந்த 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன, அவ்வாறே இன்னும் 62 சட்டங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படவுள்ளன எனவும் தெரிவித்த ஜனாதிபதி, தற்போதைய முதலீட்டுச் சபைக்கு பதிலாக பொருளாதார ஆணைக்குழுவொன்றை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும், இந்த ஆணைக்குழுவின் கீழ் தற்போதைய வர்த்தக வலயங்கள் மற்றும் புதிதாக நிறுவப்படும் வர்த்தக வலயங்கள் அனைத்தும் கட்டுப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-13)

## 119 இலக்க அவசர சேவையை மேம்படுத்த புதிய திட்டம்!




பொலிஸ் திணைக்களத்தின் 119 இலக்க அவசர சேவையை புதிய தொழிநுட்பத்துடன் நடைமுறைப்படுத்தும் வகையில் அச்சேவையை மேம்படுத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று (4ம் திகதி) தனது அமைச்சிற்கு உயர் பொலிஸ் அதிகாரிகளை அழைத்து அறிவுறுத்தியுள்ளார்.

119 அவசர இலக்கம் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன், புதிய தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி புகார் கிடைத்தவுடன் தாமதமின்றி செயல்படுவது குறித்து இங்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடு செய்தவர் தாமதிக்காமல் முறைப்பாடு கிடைத்தவுடன் அதனை உடனடியாக செயற்படுத்துமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு அமைச்சர் மேலும் பணிப்புரை விடுத்துள்ளார். (ரெம-14)






## போசாக்கு உணவுப் பொதி வழங்கி வைப்பு



(சர்ஜுன் லாபீர்)

அரச சார்பற்ற கிரிசாலிஸ் நிறுவனம் சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கான போசாக்கு உணவுப் பொதி வழங்கும் 4 ம் கட்ட நிகழ்வு நேற்று (04) சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

இப் போசாக்கு உணவுப் பொதி வழங்கும் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொதிகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ், விடயத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரக்கீபா கிரிசாலிஸ் நிறுவனத்தின் திட்ட உதவியாளர் பி. தசதரா உட்பட பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## புலனுறுப்புகளால் உலக சாதனை படைத்த பர்ஷானுக்கு கௌரவம்



(எம் எப். நவாஸ்)

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்ததாக உலகின் 26 நாடுகளில் வியாபித்திருக்கும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் முன்னிலையில் சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எஸ். எம். பர்ஷானினால் புலனுறுப்புகளால் புரியப்பட்ட சாதனைகளை உலக சாதனையாளர்களை பதியும் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருந்தார்.

இவரைக் கௌரவிக்குமுகமாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் எம் எம் முஷாரப் பினால்கடந்த 2 ஆம் திகதி அட்டாளைச்சேனை யாடோ விடுதியில் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவர் கண், காது, மூக்கு , வாய் ஆகிய புலனுறுப்புகளால் அபார சாதனையை மேற்கொண்டு பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்துவதுடன் காதினால் பலூனை ஊதி உடைத்தல், கண்களினால் இரும்பு கம்பியினை வளைத்தல் , பல்லினால் 5.7 கிலோ கிறாம் பாரத்தினை சங்கிலிகளின் உதவியுடன் உயர்த்துதல் ,குளிர்பானத்தை முக்குத்துவாரத்தினூடாக அருந்துதல் , மூக்கு துவாரத்தினூடாக வயரை செலுத்தி வாயினூடாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், பல்லினால் தேங்காய் உரித்தல் போன்ற செயற்பாடுகளை 12 நிமிடத்தில் செய்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

இவரை கிழக்கு நட்புறவு ஒன்றியமும் கௌரவித்ததமை குறிப்பிடத்தக்கது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதிவு செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!